**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU ISSN: 2320 - 4842 (P) ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இல்லற மதிப்புகள்

**அ. நாகஜோதி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் இரா. ஏஞ்சல்**
உதவிப்பேராசிரியர் மற்றும் நெறியாளர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 018.

## முன்னுரை

*மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் உயர்நிலையை அடைய இலக்கியங்கள் பல்வேறு அறநெறிகளை மதிப்புகளாகக் கற்றுத்தருகின்றன. மனித வாழ்க்கை நிலைக்கான அறங்களுள் இல்லறம் அல்லது துறவறம் என்ற ஒன்றில் மனித வாழ்வறம் கடந்து செல்கிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இல்லறம் நல்லறமாகத் திகழ, பல்வேறு கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. இல்லறத்தில் கணவனும், மனைவியும் அன்புடன், ஒற்றுமையுடன், மனமகிழ்ச்சியுடன், ஒருமித்த மனத்துடன், புரிதல் உணர்வுடன், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, அறநெறியுடன் வாழ்தல் வேண்டும் என்னும் சிந்தனையைப் பதிவு செய்கின்றன. ஏனெனில் இல்லற வாழ்க்கையில் மனிதன் நல்லறங்களைப் பின்பற்றி வாழும் போது அவனிடம் காணலாகும் நன்மதிப்புகளே பெருமையையும், புகழையும், மதிப்பையும் இச்சமூகத்தில் பெற்றுத்தருகின்றன. இல்லறத்திற்கான மதிப்புகளை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எடுத்தியம்புகின்ற விதம் குறித்து ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

## இல்லற மதிப்புகள்

*சங்க காலச் சமூகமானது அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் இல்லற வாழ்க்கையே அகம் எனப்பட்டது. தலைவன், தலைவி இணைந்து வாழும் திருமண வாழ்வை இல்லறம் என்றனர். தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் அளவில் நில்லாமல், இல்லறத்திலிருந்து அறங்களைப் புரிந்து அறவுணர்வு ஓங்கியவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இல்லறத்தைக் 'குடும்பம்', 'இல்லம்', 'இல்வாழ்க்கை' என்று அழைப்பர். மனித சமூகத்தின் அடிப்படையான குடும்ப அமைப்பே இல்லறமாகும். இல்லறத்தின் மதிப்பானது நன்முறையில் அமைந்தால் மட்டுமே சமூகமும் மதிப்புமிக்கதாய் உருவாகும்.*

## தொல்காப்பியம் சுட்டும் இல்லற மதிப்புகள்

*இல்லறத்தின் மாண்பினைக் குறித்துப் பல்வேறு இலக்கிய, இலக்கணங்கள் எடுத்தியம்புகின்றன. குறிப்பாக,*

> *"கற்பு எனப் படுவது கரணமொடு புணரக்*
> *கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
> *கொடைக்குரி மரபிகனோர் கொடுப்பக் கொள் வதுவே"[1]*

*என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தலைவனும் தலைவியும் கற்பு நெறியுடன் இல்லற வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது.*

மனையறத்தின் வேராக விளங்குபவள் மனைவி. இல்லற வாழ்க்கையில் கணவனை விட மனைவிக்கே பொறுப்பும் கடமையும் அதிகமாக இருந்ததை அறநூல்கள் சுட்டுகின் றன. மனையாளே குடும்பத்திற்காகச் சிறிதும் ஓய்வில்லாமல் பாடுபடுகின்றாள். அத்தகைய கற்புடைய பெண்டிரை 'இல்லாள்', 'மனைவி', 'மனையாள்' என்று அழைத்துள்ளனர். மனையறத்திற்குரிய மாண்புகளைத் தொல்காப்பியம்,

**"கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"[2]**

என்று சுட்டுகின்றது.

## இல்லறம் குறித்த அறிஞர்கள் கருத்து

மக்களின் வாழ்க்கைமுறை குறித்து அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர்.

ஈ. கோ. பாஸ்கரதாஸ் இல்லறத்தார்க்குரிய மதிப்புகளை, **"கற்பு, காமம், ஒழுக்கம், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம் ஓம்பல்"[3]** என்ற கிழவோள் மாண்புகளும் ஆடவர்க்குரிய வினையாகிய கடமையும் என்று வகைப்படுத்துகின்றார். இக்கருத்தின் வழியாகப் பெண்ணிற்கும் ஆணிற்குமான இல்லறக் கடமைகளை அறியமுடிகிறது.

மேலும், **"அன்பை வளர்த்து அறத்தைப் போற்றி மனத்தூய்மை பெற்று வாழும் இடம் இல்வாழ்க்கை. அன்பால் கலந்து கரைந்து மனம் பண்படும் நிலை சிறந்த இல்லற வாழ்வில் ஏற்படும். மனமகிழ்ச்சி யான இல்லம் ஒரு இனிய தோட்டம். இதில் அன்பு, நட்பு, அரவணைப்பு, கையளிப்பு, சிரிப்பு, மன்னிப்பு, மதிப்பு, சகிப்பு, பொறுப்பு, துதிப்பு என்ற இனிய பூக்கள் பூத்துக் குலுங்கும். இந்த இனிய பூக்களின் வாசம் இல்லறத்தின் வழிச் சமுதாயம் முழுவதும் பரவ வேண்டும்"[4]** என்று இல்லறம் குறித்தக் கருத்தை சந்திரசேகரன் குறிப்பிடுகிறார். இக்கருத்தின் வழியாக இல்லறத்தைப் போற்றி வளர்க்கும் அறச் செயல்கள் வழியாகத் தான் சமுதாயம் அறங்கள் நிறைந்தவையாகவும் மதிப்புமிக்க தாகவும் உருவாகும் என்பதை அறிய முடிகின்றது.

**"பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள் என அனைவரும் சேர்ந்து கூட்டமாக ஒருவர் மீது ஒருவர் அன்பாக வாழ்வதே 'குடும்பம்' எனப்பட்டது. இது மனித சமுதாயத்தின் அடிப்படை அமைப்பாகும். குடும்ப அமைப்பு ஒழுங்கான முறையில் அமைந்தால் நல்ல குடும்பம் மட்டுமின்றி நல்லதொரு சமுதாயமும் உருப்பெறும்"[5]** என்ற கருத்திலி ருந்து இல்லறமாகிய குடும்பத்தில் இருந்தே நன்மதிப்புகளைக் கொண்ட சமுதாயமும் உருவாகும் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

**"இல்லற வாழ்க்கை முறையின் அடிப்படை நெறியே கற்பியல் ஒழுக்கமாகும். மனித சமுதாயத்தில் அறிவும் பண்பாடும் வளரும் போது ஒழுக்கம் என்ற பண்பு மிகச்சிறந்த முறையில் செறிவடைகிறது, வலுவடைகிறது, சிறப்பு பெறுகிறது"[6]** என்று குறிப்பிடுகின்றார் க.பசும்பொன். இல்லறத்தில் கணவனும், மனைவியும் நல்லொழுக்கங்களைப் பேணுதல் வேண்டும். தனிமனித ஒழுக்கமே குடும்பத் திற்கும் சமூகத்திற்குமான மதிப்பினைத் தரக் கூடியதாக அமையும்.

## திருக்குறள் சுட்டும் இல்லற மதிப்புகள்

இல்வாழ்க்கையானது கற்பு நெறியும் அறச் செயலையும் அடிப்படையாகக் கொண்டு அமைதல் ஆகும். வள்ளுவர் சிறப்பாக அன்பையும், அறத்தையும் இல்லறக்கடமை யாக வலியுறுத்துகின்றார். இதனை,

**அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** (திருக்குறள்.45)

என்ற குறள் விளக்குகின்றது.

மனைவியின் இல்லறக் கடமைகளுள் இன்றியமையாதது கணவனைப் பேணுத லாகும். கணவனையே தெய்வமாகத் தொழுது எழும் மனைவியை வள்ளுவர் மழைக்கு நிகராக ஒப்பிடுகிறார்.

**தெய்வம் தொழாஅள் தொழுநன்**
**தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை** (திருக்குறள்.55)

என்ற குறட்பா இக்கருத்தை எடுத்துரைக்கி ன் றது. தன் கணவனை மனதால் நினைத்து வணங்கும் மனைவி சொன்னால் மழை பொழியும் என்ற கருத்தின் வழியாக இல்லறத்தில் மனையாளின் மதிப்பினை அறியமுடிகின்றது.

**"இல்லறமல்லது நல்லறமன்று"[7]** என்பதைக் கணவனும், மனைவியும் உணர்ந்து இல்லறத்தில் இருந்து கொண்டு தர்மங்க ளைச் செய்தல் வேண்டும். அதுவே இல்லறத்தின் தர்மம் ஆகும். இல்லறம் அல்லாத வேறு வகையில் இருந்து கொண்டு தர்மம் செய்வது நல்ல தர்மம் ஆகாது என்று கொன்றைவேந்தனில் ஔவை குறிப்பிடுகின் றார். இல்லறத்தில் கணவனும், மனைவியும் சிறந்த நிலையில் வாழ்வது மட்டுமல்லாது, சமுதாயத்தையும் நன்னெறியில் வழிப்படுத்து வதில் தான் இல்வாழ்க்கையானது நிறைவு பெறுகிறது. மேலும் இல்வாழ்க்கையின் சிறப்பினை,

**ஆற்றின் ஒழுக்கிஅறன் இழுக்கா**
**இல்வாழ்க்கை**

நோற்பாரின் நோன்மை உடைத்து
(திருக்குறள்.48)

என்ற குறளானது எடுத்துரைக்கிறது. அறநெறியில் இல்வாழ்க்கை வாழ்தல், காட்டிற்குச் சென்று அறநெறி தவம் செய்வதைவிடவும் வலுவானது என்ற கருத்து இதன் வழி பெறப்படுகிறது.

கணவனும், மனைவியும் இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு நல்லறங்களைக் கடைபிடித்தல் வேண்டும். நன்னெறிகளைக் கொண்டு வாழும் இல்லற வாழ்க்கையே சமூகத்தில் அவர்களுக்கான மதிப்பினைப் பெற்றுத்தரும் என்பதை வள்ளுவரின் குறட்பாக்கள் வழியாக அறியமுடிகின்றது.

## இன்னிலை சுட்டும் இல்லற மதிப்புகள்

இல்லறத்தில் கணவனும் மனைவியும் இணைந்து தானங்களையும், தர்மங்களையும் செய்தல் வேண்டும். இவை இல்லறத்தார்க் குரிய கடமையாகும் என்பதை அறநூல்கள் சுட்டுகின்றன.

ஐந்து குரவர்களாகிய ஆசான், அரசன், அன்னை, தந்தை, மூத்தோர் ஆகியோரைக் காத்தலும், அவர்களுக்கு வருந்துன்பத்தை நீக்குதலும், தன்னைச் சார்ந்தவர்க்கு நல்ல உணவினைக் கொடுத்து உபசரித்தலும், தன்னை நாடி வருகின்றவர்களின் கவலைகளை நீக்குதலும், ஆதுலர் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறுசமயத்தார்க்கு உணவு, பசுவிற்கு உணவு, சிறைச்சோறு, ஐயம், திண்பண்டம் வழங்கல், அறவைச் சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வளர்த்தல், அறவைப் பிணஞ் சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய் மருந்து, துணி வெளுப்பவர், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்வைத்தியம், தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்கறி, விலங்கிற்கு உணவு, ஏறுவிடுதல், விலை கொடுத்து உயிர் விடுதல், கன்னிகாதானம் போன்ற முப்பத்து இரண்டு அறச்செயல்களுள் தன்னால் ஆன அறங்களைச் செய்வதும் இல்வாழ்வானுக் குரிய கடமையாகும் என இன்னிலை குறிப்பிடுகிறது. இதனை,

**ஐங்குரவர் ஓம்பல் இனன்நீக்கல் சேர்ந்தோர்க்குப்**

**பைங்கூழ் களைகணாப் பார்த்தளித்தல்**

**நையுளித்தார்க்கு**

**உற்ற பரிவுஈர்த்தல் எண்ணான்கு அறநெறியில்**

**உற்ற புரிதல் கடன்** (இன்னிலை.37)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

பொருளாதாரத்தை மேம்படுத்த தலைவன் ஈட்டிய பொருளை அறவழியில் சேர்த்தல் வேண்டும். வருவாய்க்குத் தக்கவாறு செலவைக் குறைக்க வேண்டும். ஐந்தில் ஒரு பங்கைச் சேமித்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறு அவன் சேமித்து வைக்கும் பொருள், பிள்ளைகளின் திருமணத்திற்கும் அவனுடைய முதுமைப் பருவத்திற்கும், நோயினால் துன்பப்படும் சூழலிலும் உதவியாக அமையும் என்பதை,

**எய்ப்பில்லைப்பாக வருவாயில் ஐந்தொன்றை**

**மெய்ப்பிணி சேய்வரைவில் கூட்டிடுக**

**கைப்பொருள்வாய்**

**இட்டில்உள் வாய்இடுக்க ஈங்க விழையற்க**

**வட்டல் மனைக்கிழவன் மாண்பு**
(இன்னிலை.34)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

குடும்பநலம் பேணும் நோக்கில் ஈட்டிய பொருளை நல்லறச் செயல்களுக்குப் பயன்படுத்த வேண்டும். குடும்பத் தேவைகள் நீங்கலாக எதிர்காலத் தேவைக்கும், தான தர்மங்கள் செய்வதற்கும் பயன்படுத்த வேண்டும் என்னும் கருத்துக்கள் இதன் வழி பெறப்படுகின்றன.

## திரிகடுகம் சுட்டும் இல்லற மதிப்புகள்

குடும்பத்தை நிர்வகித்து வழிநடத்திச் செல்லும் தலையாய கடமை மனைவிக்கே உரியதாகும். கணவனது முகக்குறிப்பினை அறிந்து செயலாற்றும் மனைவியே நல்ல இல்லத்தரசியாவாள். அத்தகைய மனைவியானவள் மழைபொழியுமாறு வேண்டினாள், மழை பொழியும் என்பதைத் திரிகடுகப் பாடலானது,

**கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி**

**செய்வகை செய்வான் தவசிகொடி தொரீஇ**

**நல்லவகை செய்வான் அரசர் இவர்மூவர்**

**பெய்யெனப் பெய்யும் மழை** (திரிகடுகம்.96)

எனக் குறிப்பிடுகின்றது. மேலும், கற்புடைய மனையாளைத் தவசிக்கும், அரசனுக்கும் இணையாக உயர்த்திக் கூறுவதன் வழி மனையறம் காத்தலில் பெண்ணிற்கான மதிப்பு பெறப்படுகிறது.

விருந்தினரை அன்புடன் உபசரித்தல், கணவனுக்கு உற்ற துணையாக இருத்தல், நாள்தோறும் இல்லற வாழ்க்கையை இனிமையாக நடத்தி மனையறம் காத்தல், தன்குடிகளைக் காத்து நன்மக்களைப் பெறுதல் இவைகளே கற்புடைய பெண்ணின் கடமையாகும் என்பதை,

**நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்**

**இல்புறம் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்**

**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்**

**கற்புடையாள் பூண்ட கடன்** (திரிகடுகம்.64)
என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

இல்லறத்திற்கு அழகு சேர்ப்பவள் இல்லாள் ஆவாள். கற்பொழுக்கத்தால் சிறந்தவளாகவும் கணவனின் உயர்வை மேம்படுத்துவளாகவும், இல்லறத்தைப் பேணுவளாகவும் திகழ்கின் றாள். இவ்வாறு தனிமனித நிலை, குடும்ப நிலை, சமூக நிலை எனப் பன்முக நிலையில் சுட்டப்படும் பெண்கள் குறித்த பதிவுகள் வழியாக பெண்களுக்கான மதிப்புகள் பெறப்படுகின்றன.

## சிறுபஞ்சமூலம் சுட்டும் இல்லற மதிப்புகள்

ஆணும், பெண்ணும் ஒரே மாதிரியான இயல்புகளைக் கொண்டவர்கள் அல்லர். பெண் என்பவள் மென்மையானவள். இல்லற வாழ்வில் பெண்ணானவள் அன்பு, பொறுமை, விட்டுக்கொடுத்தல், குடும்பத்தை நல்வழிப்படுத்துல் போன்ற பண்புகளில் சிறந்து விளங்குகிறாள்.

கணவருடைய வருவாயை அறிந்து செயல்படுதல், அதற்கு ஏற்ப செலவு செய்து இல்லறம் நடத்துதல், சுற்றத்தைப் பேணுதல், விருந்தினரை உபசரித்தல், தெய்வ வழிபாட் டில் எந்நாளும் தவறாது மேற்கொண்டு ஒழுகுதல் போன்ற நற்செயல்கள் பெண் களிடம் கட்டாயம் காணப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதை,

**வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்**
**வெகுவாமை வீழ்ந்து விருந்தோம்பி - திருவாக்கும்**
**தெய்வத்தையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு**
**செய்வதே பெண்டிர்ச் சிறப்பு**
(சிறுபஞ்சமூலம்.42)

என்று சிறுபஞ்சமூலம் சுட்டுகின்றது.

சுற்றம் பேணுதல், அடக்கமுடைமை, பிற ஆடவரை விரும்பாமை, பெருமை, நாணம் இவை ஐந்தும் திருமகளுக்கு நிகராகப் பெண்களிடம் காணப்பட வேண்டிய பண்புகளாகும். குடும்பத்தைத் திறம்பட நடத்தும் பெண்களைத் திருமகளுக்கு நிகராகக் கருதுவர். இதனை,

**பேண்அடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுடைமை**
**நாண்ஒடுக்கம் என்றைந்து நன்றாகப் புண்ஒடுக்கம்**
**பொன்வரைக் கோங்குஏர்ப் புந்திருவே ஆயினும்**
**தன்வரைத் தாழ்த்தல் அரிது**
(சிறுபஞ்சமூலம்.44)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

இல்லறத்தில் அன்பு பெருகவும், அமைதி பெருகவும், மகிழ்ச்சி பெருகவும் காரணமாக இருப்பவள் இல்லாளே ஆவாள். மனையறம் காத்தலில் பெண்ணிற்கான நற்செயல்கள், குணங்கள் குறித்து சிறுபஞ்சமூலம் பகர்வதன் வழியாகப் பெண்ணிற்கான இல்லற மதிப்பு அறியமுடிகிறது.

## திணைமாலை நூற்றைம்பது சுட்டும் இல்லற மதிப்புகள்

ஒவ்வொரு ஆண்மகனும் எத்தகைய செயலை யும் செய்து முடிக்கும் மனத்திண்மையையும், உடல்வலிமையும் பெற்றிருந்தனர். **"வினையே ஆடவர்க்கு உயிர்"**[8] என்ற குறுந்தொகைப் பாடலானது ஆணிற்கான அடையாளம், தொழில் செய்து குடும்பத்தைக் காத்தல் எனக் குறிப்பிடுகிறது. இல்லற வாழ்வில் பொருளீட்டுதல் என்பது குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அற வழியில் பொருளை ஈட்டுவதாகும். அவ்வா றாகக் குடும்பத்தை விட்டுப் பிரியும் சூழ்நிலைகளிலும் அறத்தைப் பேணுதலைத் தம் தலையாய கடனாகக் கொண்டிருந்தனர்.

தனக்கான கடமை மற்றும் பொறுப்புணர்ந்து தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான். அச்சூழலில் அவளைப் பிரிந்த தலைவி வருத்தமடைகிறாள்.

**ஆண்கட னாமாற்றை வாயுங்கா லாடவாக்குப்**
**பூண்டகடனாய் போற்றிப் புரிந்தமையாற் - பூண்கடனாச்**
**செய்பொருட்குச் செல்வராற் சின்மொழி நீ சிறிது**
**நைபொருட்கட் செல்லாமை நன்று**
(திணைமாலை நூற்றைம்பது.82)

தலைவனின் பிரிவால் வருத்தமடையும் தலைவியை அவளுடைய தோழி ஆறுதல் படுத்துகிறாள். பொருள் தேடுதல் ஆண் மகனது கடமை என்பது பெரியோர் வகுத்த நெறி. அத்தகைய கடமைக்காக நம் தலைவர் சென்றுள்ளார். ஆதலால் நீ சிறிது காலம் பிரிவால் வருத்தம் அடையாமல் தலைவன் வரைவுக்காக ஆற்றியிருப்பது 'உன்னுடைய கடமை' ஆகும் என்று தோழி தலைவியை ஆற்றுப்படுத்துவதன் வழியாக அறிய முடிகின்றது.

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் களவு அறம் நீங்கி கற்பு வாழ்க்கை வாழ விரும்புகின்றனர். எனவே உடன்போக்கு மேற்கொள்கின்றனர்.

உடன்போக்கு மேற்கொண்ட தலைவியைத் தேடி செவிலித்தாய் பின் செல்கின்றாள். அப்போது அவளுக்கு எதிரில் ஆணும் பெண்ணுமாக எதிர்வரும் இருவரிடம் உடன் போக்கு சென்றோர் குறித்துக் கேட்கிறாள். அவ்வாறாக எதிர்ப்பட்ட இருவரில் ஆண்மகன் செவிலித்தாயிடம் வெப்பம் மிக்க சூரியனைப் போன்ற ஓர் இளைஞன் போவதைக் கண்டதாகக் கூறுகின்றான்.

அவளுடன் குளிர்ந்த சந்திரன் போன்ற பெண் ணொருத்தி உடன் சென்றதையும் கண்டதாகக் கூறுகின்றான். இதனை,

**நண்ணிநீர் சென்மி னமரவ ராபவே**
**வெண்ணிய வெண்ண மெளிதரோ - வெண்ணிய**
**வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாற்**
**தண்சுட ரன்னானைத் தான்**

(திணைமாலை நூற்றைம்பது.89)

என்ற பாடல் சுட்டுகிறது.

இந்நிகழ்வு இல்லற வாழ்விற்கு அடிப்படைத் தேவை அன்பு என்னும் கருத்தை முன்வைக்கிறது. களவு வாழ்வில் எவ்வாறு தலைவியின் மனம் கோணாது தலைவன் அவளை அன்பு செய்து அரவணைத்துக் காத்துக் கொள்கின்றனோ அதே அன்பு இறுதி வரை நிலைத்திருக்க வேண்டும் என்ற செய்தி அப்பாடல் படிப்போருக்கான உள்ளுறை செய்தியாகவும், இல்லற வாழ்வுக்கு அடிப்படைப் புரிதல் அன்பு மட்டுமே என்ற அறிவுரைச் செய்தியாகவும் அமையக் காணலாம்.

## முடிவுரை

தனிமனிதன் சமூகத்தில் வாழ வேண்டிய முறைமைகள் குறித்தும் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கமுறைமைகள் குறித்தும் பதினெண்கீழ்கணக்கு நூல்கள் அறிவுறுத்துகின்றன. தனிமனிதன் வழியாகக் குடும்பமும், குடும்பத்தின் வழியாகச் சமுதாயமும் மதிப்புகளாகத் திகழ அறநூல்களே அடிப்படையாக அமைகின்றன என்ற செய்தி இந்த ஆய்வுக்கட்டுரை வழி பெறப்படுகிறது.

## நிறைவுரை

- இல்லறவாழ்க்கையில் கணவன், மனைவி அறநெறிகளுடன் வாழ்தல் வேண்டும்.
- இல்லறத்தில் தனிமனிதன் வாழும் வாழ்க்கையே சமூகத்தில் தனிமனிதனுக் கான பெருமையையும், புகழையும், மதிப்பையும் தருகின்றன.
- இல்லறத்தில் மனைவியானவள் மனை யறத் திற்குரிய மாண்புகளைப் பெற்றவ ளாகவும், குடும்பத்தை நிர்வகிப்பதில் கடமை உடைய வளாகவும், கற்புநெறி பிறழாமல் பெண்ணிற் குரிய நற்பண்பு களைக் கொண்டு மதிப்பு மிக்கவளா கவும் இருப்பதை அறநூல்கள் விதந்தோது கின்றன.
- பொருளீட்டியதை நன்முறையில் சேமித்து பிற்காலத்திய தேவைக்குப் பயன்படுத்தும் சிறந்ததலைவனாக சங்ககாலத் தலைவன் திகழ்ந்தமையை அறியமுடிகின்றது. பொருளீட்டுவதில் அறத்தைப் பேணும் ஆண்மகனின் நல்லறச் செயல்கள் மதிப்புகளாக கீழ்க்கணக்கு நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இல்லறத்தில் கணவனும், மனைவியும் மேற்கொள்ளும் அறங்களே இச்சமூகத்தில் வாழ்க்கைக்கான மதிப்புகளாகப் போற்றப் படுகின்றன.
- ஆய்வுக் கட்டுரைக்குட் படுத்தப்பட்ட திருக்குறள், இன்னிலை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், திணைமாலை நூற்றைம் பது போன்ற அறநூல்களின் வழியாக இல்லற மதிப்புகள் குறித்து அறிய முடிகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-கற்பியல்.140.
2. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-கற்பியல்.150.
3. முனைவர் சேதுமணிமணியன், மதிப்பாய்வு ஒரு வழிகாட்டி, ப.24.
4. முனைவர் இரா.சந்திரசேகரன், முனைவர் ப.சரவணன், நாலடியாரில் அறவாழ்வு, ப.39.
5. முனைவர் ப.பிரியதர்ஷினி, முனைவர் நா.மலர்விழி, (தொ.ஆ.), நீதி இலக்கியங் களில் ஒழுக்கவியல் சிந்தனைகள், ப.56.
6. முனைவர் க.பசும்பொன், ச.அய்யங் காளை, முனைவர் வீ.ரேணுகா தேவி செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் கற்பு நெறி, ப.99.
7. கொன்றைவேந்தன், பா.எ.3
8. சோமசுந்தனார் (உ.ஆ.), குறுந்தொகை, பா.எ.135.

## துணை நின்ற நூல்கள்


1. முனைவர் இரா.சந்திரசேகரன், முனைவர் ப.சரவணன், நாலடியாரில் அறவாழ்வு, சீதை பதிப்பகம், சென்னை - 600005, 2ஆம் பதிப்பு, 2024.
2. முனைவர் சேதுமணிமணியன், மதிப்பாய்வு ஒரு வழிகாட்டி, செண்பகம் வெளியீடு, மதுரை - 625 014, முதல் பதிப்பு, 2016, செப்டம்பர்.
3. சோமசுந்தனார், பொ.வே. (உ.ஆ.), குறுந்தொகை, திருநெல்வேலித் தென்னிந்திய சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, முதற்பதிப்பு, மே 1965.
4. தஞ்சை.எஸ்.குமாரசுவாமி பிள்ளை, பண்டிதமித்தர யந்திரசாலை, முதற் பதிப்பு, 1906.
5. முனைவர் ச.திருஞானசம்பந்தம், தொல் காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற் பதிப்பு, மார்ச்சு, 2018.
6. முனைவர் க.பசும்பொன், ச.அய்யங் காளை, முனைவர் வீ.ரேணுகா தேவி, செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் கற்பு நெறி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 600098, முதல் பதிப்பு, செப்டம்பர், 2010.
7. முனைவர் ப.பிரியதர்ஷினி, முனைவர் நா.மலர்விழி, (தொ.ஆ.), நீதி இலக்கியங் களில் ஒழுக்கவியல் சிந்தனைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 600098, முதல் பதிப்பு, ஜீலை 2019.